# சோளிங்கர் நகராட்சி

## 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29– ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

**தலைமை :– திருமதி தமிழ்செல்வி அசோகன் நகர்மன்றத் தலைவர்**

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 29.12.2023 | **பொருள்எண்.1**<br>இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து திட்டப்பணிகள் (அரசின் திட்ட பணிகள் / வளர்ச்சி பணிகள் மற்றும் சாதனைகள் சம்மந்தமாக தினசரி நாளிதழிலில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) விளம்பரம் மேற்கொள்ள ஓர் ஆண்டிற்கான (ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024) வரையிலான காலத்திற்கு தோராய செலவினம் ரூ.2,00,000/– (ரூ.இரண்டு லட்சம் மட்டும்) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). இவ்விளம்பர செலவினத்தை பொதுநிதி/குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.538 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **பொருள்எண்.2**<br>இல்லம் தேடி அரசு சேவை நிர்வாக புதுமை, முக்கிய பொது சேவை பலன்களை வீட்டு வாசலில் அனைவருக்கும் கொண்டு செல்வது சமூக மன்றத்தில் முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அதன் அடிப்படையில் இல்லம் தேடி அரசு சேவை வழங்குதல் தொடர்பான குறைகளை விரைவாக நிவர்த்தி செய்வதை உறுதி செய்தல் , குறைகளுக்கு குறிப்பிட்டு கால கெடுவிற்குள் உறுதியான தீர்வு காண வேண்டும். நகரப்புற உள்ளாட்சி அமைப்புகள் 10 முக்கிய துறைகள் மற்றும் அவற்றின் சேவைகளை கவனம் செலுத்தி உடன் குறைகளை நிவர்த்தி செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட 10 துறைகள் முகாம்கள் நடத்தி பொது மக்கள் சேவைகள் உடன் நிவர்த்தி செய்ய அறிவுறுத்தப்படுகிறது. துறைகளின் விவரம்<br>1). எரிசக்தி (TANGEDCO)<br>2). நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை<br>3). வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை<br>4). வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை<br>5). காவல்துறை | நகர்மன்றத் தீர்மான எண்.539 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 6). மாற்றுத்திறனாளிகள் துறை<br>7). சமூக நலத்துறை<br>8). ஆதிதிராவிட நலத்துறை<br>9).மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்<br>10). சிறப்பு திட்ட அமலாக்கம்.<br>மேற்கண்ட 10 நிறுவனங்கள் மூலம் 5 வார்டுகளுக்கு மிகாமல், ஏதேனும் ஒரு சமூக மன்றத்தில் முகாம்கள் அமைத்து முகாம்களுக்கு தேவையான மின்சாரம், குடிநீர் வசதி, சுகாதார வசதி மற்றும் முதலுதவி.<br>வயதானவர்கள், கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் போன்ற பார்வையாளர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்தல்.<br>முகாம்களில் தரவு நிரலர்கள் ஏற்பாடு செய்தல் அனைத்து மேசைகளிலும் தகவல் தொழில்நுட்ப ஒத்துழைப்பு இருப்பதை உறுதி செய்தல்.<br>உதரி கணினி/மாற்று மடிக்கணினி இருப்பதை உறுதி செய்தல் முகாமுக்கு முன்னர் விளம்பரம் செய்தல். முகாம் நடைபெறும் இடங்களின் விவரம் மற்றும் தேதி பொது மக்களுக்கு தெரிவிக்குமாறு விளம்பரம் செய்தல்.<br>சமூக ஊடகங்களில் முகாமின் செயல்பாடுகளை விளம்பரபடுத்துதல். மேற்படி பணிகள் அனைத்து உடனுடக்குடன் செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளதால். மேற்படி பணிகள் செய்வதற்கான தோராய செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரரின் மூலம் மேற்படி பணியினை செய்து கொடுக்க வேண்டியுள்ளதால் நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.215/2023/எச்1) | |

| | | |
|---|---|---|
| 29.12.2023 | **<u>பொருள்எண்.3</u>**<br>இந்நகராட்சியில் 15வது நிதிக் குழு சுகாதார மான்யம் 2023 –2024 ம் திட்டத்தின் கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் புதியதாக மருத்துவமனை கட்டுவதற்கு ஏதுவாக அப்பகுதியில் மண் பரிசோதனை செய்து அறிக்கை வழங்க மண்பரிசோதனை கட்டணமாக ரூ.35400/– செலுத்த முதல்வர், தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரி, வேலூர் அவர்களின் Letter No.TPGIT/PCEE/SOIL/2023–24/39C DT.29.11.2023. அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி "The Principal, TPGIT, Vellore." என்ற பெயருக்கு ரூ.35400/–ஐ வரையோலையாக (Demand Draft) செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இச்செலவினத்தை பொது நிதிநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.655/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.540 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **<u>பொருள்எண்.4</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14, முருகாரெட்டி தெருவில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.4.85லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இச்செலவினத்தை பொது நிதிநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.541 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **<u>பொருள்எண்.5</u>**<br>சோளிங்கர் நகராட்சி அலுவலகத்திற்கு 2023–2024 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், டோனர், A4 sheet paper மற்றும் பதிவேடுகள் வாங்கி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தி கொள்ள தோராய செலவின தொகையான ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :–<br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவீனம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.593/2023/சி1) | நகர்மன்றத் தீர்மான எண்.542 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29.12.2023 | **<u>பொருள்எண்.6</u>**<br>இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டுஎண்.1 ல் உள்ள பாலாஜி நகரில் மண்ரோடாக உள்ளது. மிக்ஜம் புயல் காரணமாக மண்சாலை சேதமடைந்து சேரும் சகதியுமாக அதிகமழை நீர் தேங்கியுள்ளதால், பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் இடையூராக உள்ளது என அப்பகுதி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்ததின் பேரில் பொதுமக்களின் நலன் கருதி சேரும் சகதியுமாக உள்ள சாலையை கிராவல் மண்கொட்டி நிறவும் பணிக்கு தோராய செலவினம் ரூ.50,000/- (ரூ.ஐம்பதாயிரம் மட்டும்) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு-<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இச்செலவினத்தை பொது நிதிநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.543 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **<u>பொருள்எண்.7</u>**<br>இந்நகராட்சியில் ஒப்பந்தப் பணிகள் இணையதளத்தில் (Online) பதிவேற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்ய நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளருக்கு Digital Signature Chip (DSC card) வாங்க தோராய செலவினத் தொகை ரூ.10,000/-க்கு 18.10.2023 அன்று மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. அதன்படி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களுக்கு அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற திரு.P.Balaji (E-Mudra Partner/ DSC Enrolment Kit), Navalpur. Ranipet அவர்களிடம் DSC card பெறப்பட்டது. மேலும் பொது பணி மேற்பார்வையாளர் அவர்களுக்கும் Digital Signature Chip (DSC card) கூடுதலாக DSC பெறப்பட்டுள்ளது. அதன்படி பொது பணி மேற்பார்வையாளர் அவர்களுக்கு கூடுதலாக வாங்கிய வகையில் ரூ.6000/- (E-Mudra Partner/ DSC Enrolment Kit), Navalpur. Ranipet நிறுவனத்திற்கு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு -<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.1129/2023/இ1 | நகர்மன்றத் தீர்மான எண்.544 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

29.12.2023

**பொருள்எண்.8**

சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி 2023–2024 கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 09.11.2023–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எ ண் | பணியின் பெயர் | தொகை ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள் ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | சோளிங்கர் நகராட்சிக்கு தற்காலிக கழிவறை 6 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தல் பணி (2 எண்ணிக்கை ஸ்டேண்டு, 2 எண்ணிக்கை 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டி) | 6,00,000 | We.Ce.சானி டேஷன் 0.50% மதிப்பீட்டை விட குறைவு | கிரான்ட் டிரேடர்ஸ் 0.60 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | கொண்டபாளையம் பகுதியில் உள்ள அனைத்து தெருக்கள் மற்றும் சாலைகளில் இரண்டு பக்கமும் உள்ள முட்புதர்கள் மற்றும் புல்செடி கொடிகளை அகற்றி பழுது ஏற்பட்டுள்ள சாலைகளை சமன் செய்தல் பணி | 1,50,000 | S.L.பாபு 0.25% மதிப்பீட்டை விட குறைவு | M. ரகு 0.30% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு :–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.749/2023/இ1)

நகர்மன்றத் தீர்மான எண். **545** ஒப்புதல் அளிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 29.12.2023 | **<u>பொருள்எண்.9</u>**<br>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-2024 ன் கீழ் கீழ்கண்ட பணிகள் செய்ய 06.12.2023-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது. | நகர்மன்றத் தீர்மான எண்.546 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | சோளிங்கர் நகராட்சி போர்டின் பேட்டை தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 5,00,000 | ஆர்.தயாநிதி 0.15% மதிப்பீட்டை விட குறைவு | K.சுந்தர்ராஜன் 0.24% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | சோளிங்கர் நகராட்சி பேருந்து நிலையம் அருகில் உள்ள சப்ரிஜிஸ்டர் சாலையில் பேவர் பிளாக் அமைக்கும் பணி | 3,00,000 | K.சுந்தர்ராஜன் 0.07% மதிப்பீட்டை விட குறைவு | ஆர்.தயாநிதி 0.10% மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு.</u>**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி சதவீதத்தை ஏற்று பணி ஆணை வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண். 52/2023/இ1)

| | | |
|---|---|---|
| 29.12.2023 | **<u>பொருள்எண்.10</u>**<br>சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி மற்றும் குடிநீர் நிதி 2023-2024 கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 15.12.2023-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது. | நகர்மன்றத் தீர்மான எண்.547 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| வ. எண் | பணியின் பெயர் | தொகை ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிஎல்லைக்குட்பட்டவார்டு எண்.13, லிங்கா ரெட்டி தெருவில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணி | 1,50,000 | S.L.பாபு 0.75% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 1.11% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | இந்நகராட்சிஎல்லைக்குட்பட்டவார்டு எண்.16, மோட்டூர் (ஐய்யனேரி சாலை) அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணி | 1,50,000 | S.L.பாபு 0.54% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.83% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக்குறிப்பு :-

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.749/2023/இ1)

---

29.12.2023

<u>பொருள்எண்.11</u>

சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி மற்றும் குடிநீர் நிதி 2023-2024 கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 13.12.2023-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் பெயர் | தொகை ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தெருக்களின் பெயர்கள் மற்றும் பலகைகள், நகராட்சி எல்லை பகுதிகளில் சோளிங்கர் பேரூராட்சி என்று உள்ளதை நகராட்சி என மாற்றி அமைக்கும் பணி | 3,00,000 | சூர்யா டிஜிட்டல் பிரிண்டர்ஸ் 0.30% மதிப்பீட்டை விட குறைவு | பிரித்தி எண்டர்பிரைசர்ஸ் 0.40 % மதிப்பீட்டை விட அதிகம் |

நகர்மன்றத் தீர்மான எண்.**548** ஒப்புதல் அளிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வாரச்சந்தையில் உள்ள வணிக கடைகளுக்கு முன்புறம் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் (ம) சிறுபாலம் அமைக்கும் பணி | 6,50,000 | S.L.பாபு 0.60% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.42% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | வார்டு எண் 26, சாவடி தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 5,00,000 | S.L.பாபு 0.30% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.40% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண். 02 பாலாஜி நகரில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 5,00,000 | S.L.பாபு 0.44% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.25% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 23 அப்பன்கார குளத்தை சுற்றி உள்ள முட்புதர்களை அகற்றும் பணி | 3,00,000 | S.L.பாபு 0.41% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.79% மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | மேல்நிலைநீர்தேக்கதொட்டிகளில்உள்புறம் (ம) வெளிபுறம்உள்ளஏணிகளைமாற்றி அமைக்கும் பணி | 6,00,000 | என்.எல்.சுப்பிரமணி 0.25% மதிப்பீட்டை விட குறைவு | S.L.பாபு 0.30% மதிப்பீட்டை விட அதிகம் |
| 7 | இந்நகராட்சிக்குசொந்தமான இறைச்சி மார்கெட்டில் 30 கடைகளில் கடை எண் 3,8,14,15,16 மற்றும் 17 ஆகிய கடைகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அவற்றை மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணி | 5,00,000 | S.L.பாபு 0.50% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.61 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக்குறிப்பு :-

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.749/2023/இ1)

29.12.2023

**<u>பொருள்எண்.12</u>**

சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி 2023–2024 கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 08.12.2023–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் பெயர் | தொகை ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மக்களுடன் முதல்வர் இல்லம் தேடி அரசு சேவை முகாம்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணிக்கு | 5,00,000 | S.L.பாபு 0.30% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.50% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | மக்கும் குப்பையை அரைத்து இயற்கை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள 20 H.P திறன் கொண்ட அரவை இயந்திரம் (Bio sherdding Machine) சப்ளை செய்யும் பணி | 8,50,000 | Sri Kaliyamman Trading Corporative 0.25% மதிப்பீட்டை விட குறைவு | Sri Adhanur Amman Trading 0.45% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக்குறிப்பு :–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைவான ஒப்பந்தப்புள்ளியை வரிசை எண். 1ல் உள்ள பணிக்கு மட்டும் ஏற்று நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.348/2022/இ1)

நகர்மன்றத் தீர்மான எண்.549 ஒப்புதல் அளிக்கப்பட்டது

29.12.2023

**<u>பொருள்எண்.13</u>**

சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி மற்றும் குடிநீர் நிதி 2023–2024 கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 15.12.2023–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

நகர்மன்றத் தீர்மான எண்.550 ஒப்புதல் அளிக்கப்பட்டது

| | | வ.எண் | பணியின் பெயர் | தொகை ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | வார்டு எண் 8 வெங்கட்ராய பிள்ளை தெருவில் ஏற்கனவே அமைந்துள்ள மழைநீர் வடிகால்வாயினை உயர்த்தி கட்டும் பணி | 4,10,000 | ஆர்.தயாநிதி 0.57% மதிப்பீட்டை விட குறைவு | கே.சுந்தர்ராஜன் 0.44 % மதிப்பீட்டை விட அதிகம் | | |
| | | 2 | கொண்டபாளையத்தில் அமைந்துள்ள இடுகாட்டிற்கு ஆழ்துளை கிணறு (ம) மின்மோட்டார் பொருத்தும் பணி (ம) தண்ணீர், மின்வசதி (ம) காத்திருப்பு அறை அமைக்கும் பணி | 7,50,000 | S.L.பாபு 0.69% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.80% மதிப்பீட்டை விட அதிகம் | | |
| | | 3 | வாலாஜா சாலையில் உள்ள இடுகாட்டிற்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணி(ம) தண்ணீர், மின்வசதி (ம) காத்திருப்பு அறை அமைக்கும் பணி | 7,50,000 | S.L.பாபு 0.96% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 1.05% மதிப்பீட்டை விட அதிகம் | | |
| | | 4 | வார்டு எண் 10 யாதவ தெருவில் சிமெண்ட் சாலை பழுது பார்க்கும் பணி (ம) மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 5,00,000 | S.L.பாபு 0.32% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.30% மதிப்பீட்டை விட அதிகம் | | |
| | | 5 | திருத்தணி சாலையில் உள்ள இடுகாட்டிற்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணி(ம) தண்ணீர், மின்வசதி (ம) காத்திருப்பு அறை அமைக்கும் பணி | 7,50,000 | S.L.பாபு 0.73% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 1.04% மதிப்பீட்டை விட அதிகம் | | |
| | | 6 | எசையனூர் செல்லும் சாலையில் உள்ள ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணி(ம) தண்ணீர், மின்வசதி (ம) காத்திருப்பு | 9,80,000 | S.L.பாபு 0.31% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.54% மதிப்பீட்டை விட அதிகம் | | |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>அறை அமைக்கும் பணி</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>7</td><td>வார்டுஎண் 8 போர்டின் பேட்டை தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றுக்கு புதியதாக மின்மோட்டார் அமைக்கும் பணி</td><td>2,00,000</td><td>ஆர்.தயாநிதி<br>0.20%<br>மதிப்பீட்டை விட குறைவு</td><td>கே.சுந்தர்ராஜன்<br>0.30%<br>மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>8</td><td>சோளிங்கர்நகராட்சிக்கு Online Grevance Redressed System செயல்படுத்த UTIS, ULB WARD Boundary Map, Shape file (Shp) Dwg file and docx file format GIS மென்பொருள்மூலம்உருவாக்கும்பணி</td><td>8,00,000</td><td>Hagrios, Chennai<br>0.14%<br>மதிப்பீட்டை விட குறைவு</td><td>Nilam Foundation Thiruvannamedu<br>0.28%<br>மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலக்குறிப்பு :–<br>
1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>
2. குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.749/2023/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>29.12.2023</td>
<td><u>பொருள்எண்.14</u><br>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14 முருகா ரெட்டி கிழக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் கட்டுதல் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>
அலுவலக்குறிப்பு :–<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.749/2023/இ1 )</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.551 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29.12.2023</td>
<td><u>பொருள்எண்.15</u><br>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23 அரக்கோணம் ரோடு 3 வது தெரு மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய், சிறுபாலம் மற்றும் பாறைமேடு சாலை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.552 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | |
| 29.12.2023 | <u>பொருள்எண்.16</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22 சங்கர் நகரில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.6.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.553 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | <u>பொருள்எண்.17</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 லிங்கா ரெட்டி தெரு (அரசினர் மகளீர் மேல்நிலை பள்ளி அருகில்) மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.6.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.554 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | <u>பொருள்எண்.18</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 குட்டை தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.555 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | | |
| 29.12.2023 | **பொருள்எண்.19**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5 சோமசமுத்திரம் சாலையில் மின்மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :-<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.556 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **பொருள்எண்.20**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26 அன்னதான சத்திரம் குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :-<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.557 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **பொருள்எண்.21**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20 தென் வன்னியர் தெருவில்(காக்கா தோப்பு) மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :-<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.558 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29.12.2023 | <u>பொருள்எண்.22</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15 எசையனூர் சர்ச் தெரு மற்றும் கங்கையம்மன் கோவில் தெரு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.6.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.559 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | <u>பொருள்எண்.23</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14 பாரதி நகர் குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.6.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.560 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | <u>பொருள்எண்.24</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 மோட்டூர் சுடுகாட்டில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணி, தண்ணீர், மின் வசதி மற்றும் காத்திருப்பு அறை பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.561 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29.12.2023 | <u>பொருள்எண்.25</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27 புஜங்கராவ் குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749 /2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.562 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | <u>பொருள்எண்.26</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.05 பில்லாஞ்சி சுடுகாட்டில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணி, தண்ணீர், மின் வசதி மற்றும் காத்திருப்பு அறை பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.563 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | <u>பொருள்எண்.27</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15 எசையனூர் சுடுகாட்டில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணி, தண்ணீர், மின் வசதி மற்றும் காத்திருப்பு அறை பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.564 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29.12.2023 | **பொருள்எண்.28**<br>இந்நகராட்சியில் பொன்னை தலைமை நீரேற்று நிலையத்தில் குளோரினேஷன் பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749 /2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.565 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **பொருள்எண்.29**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.3679/2023/அ3, நாள். 08.11.2023 ஆம் தேதிய கடிதத்தில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பிளாஸ்டிக் ஒழிப்பு, மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தரம் பிரித்து வழங்குதல், மழைநீர் சேகரிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு போன்ற விழிப்புணர்வுகளை பொது இடங்களில் மக்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த 12.12.2023 ஆம் தேதியில் கலைநிகழ்ச்சி நடத்த அறிவுறுத்தியுள்ளதற்கிணங்க, விழிப்புணர்வு ஏற்படுத்த ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.7,500/– வீதம் இரண்டு இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ள ரூ,15,000/– செலவினத் தொகையாகும், மேற்படி கலைநிகழ்ச்சியை வெங்கடாசலபதி நாடக சபா, சென்னை அவர்கள் மூலம் மேற்கொண்டதற்கு, மேற்கண்ட செலவின தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகுறிப்பு:<br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வெங்கடாசலபதி நாடக சபா, சென்னை என்ற கலைக்குழுவிற்கு மேற்படி செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண். 1605/2023/எச்1 | நகர்மன்றத் தீர்மான எண்.566 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **பொருள்எண்.30**<br>இல்லம் தேடி அரசு சேவை நிர்வாக புதுமை, முக்கிய பொது சேவை பலன்களை வீட்டு வாசலில் அனைவருக்கும் கொண்டு செல்வது சமூக மன்றத்தில் முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட உள்ளதையொட்டி இந்நகராட்சி பகுதிகளில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 29.11.2023 முதல் 01.12.2023 வரை கலைநிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த மேற்கொள்ள நாள் ஒன்றுக்கு ஆகும் தோராய | நகர்மன்றத் தீர்மான எண்.567 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செலவினம் தொகை ரூ.20,000/- வீதம் மூன்று நாட்களுக்கு ரூ.60,000/- செலவினத் தொகையாகும், மேற்படி கலைநிகழ்ச்சியை சிவசக்தி கிராமிய கலைக்குழு மூலம் மேற்கொள்ளவும் செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகுறிப்பு:<br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. இல்லம் தேடி அரசு சேவை 29.11.2023 முதல் தொடர்ந்து 3 நாட்கள் நடத்தப்பட உள்ளதால் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சிவசக்தி கிராமிய கலைக்குழுவிற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண். 1605/2023/எச்1 | |
| 29.12.2023 | <u>பொருள்எண்.31</u><br>நகராட்சி நிர்வாகம் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.16118/2022/CFC-1 நாள் 21.03.2023 ல் சோளிங்கர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் (TIED GRANT) 2022-2023ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 7 எண்ணிக்கையிலான LCV வாகனங்கள் கொள்முதல் செய்த வானங்களை, போக்குவரத்து மற்றும் சாலை பாதுக்காப்பு அலுவலகம் (RTO), இராணிப்பேட்டையில் வாகனம் பதிவு செய்தல் மற்றும் வாகனத்திற்கான காப்பீடு கட்டணம் ஆகியவை செலுத்த ஆகும் தோராய செலவின தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :-<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749 /2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண். 568 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | <u>பொருள்எண்.32</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.04 குமரன் தெரு மற்றும் வார்டு எண்.09 முன்னீஸ்வரன் கோயில் தெருவில் அமைந்துள்ள மினிபவர் பம்புகளின் சர்வீஸ் ஒயர்கள் பழுதடைந்துள்ளதை பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.50,000 ஆயிரத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது. | நகர்மன்றத் தீர்மான எண்.569 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1) | |
| 29.12.2023 | <u>பொருள்எண்.33</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 முதல் வார்டு எண்.27 வார்டுகள் வரை குளோரினேஷன் பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.570 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | <u>பொருள்எண்.34</u><br>தமிழ்நாட்டில் வடக்கிழக்கு பருவமழை காரணமாக வங்க கடலில் உருவான காற்றழுத்தம் மிக்ஜாம் புயலாக மாறியதால் அத்தியாவசிய பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும், பொதுமக்களின் நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் JCB வாகனங்கள் வாடகை அடிப்படையில் இரண்டு எண்ணிக்கையில் ஐந்து நாட்களுக்கு பயன்படுத்தப்பட்ட வகையில் செலவினம் ரூ.122000/– மற்றும் பாய் மற்றும் பெட்சீட் 50 எண்ணிக்கையில் கொள்முதல் செய்த வகையில் அதற்கான செலவினம் ரூ.34500/– மேற்கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) இச்செலவினத்தை பொது நிதி நிதியிலிருந்து மேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண்.1700/2023/இ1 | நகர்மன்றத் தீர்மான எண்.571 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | <u>பொருள்எண்.35</u><br>சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி 2023–2024 கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 27.10.2023–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது. | நகர்மன்றத் தீர்மான எண்.572 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| வ. | பணியின் பெயர் | தொகை | குறைவாக | அதிகம் |
|---|---|---|---|---|

| எ ண் | | ரூ. | அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.27 கொண்டபாளையத்தில் அமைந்துள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு குளோரினேஷன் பிளான்ட் அமைக்கு பணி | 5,00,000 | ஸ்ரீசபரி இன்ஜினியரிங்ஸ் ஒர்க்ஸ் 0.50% மதிப்பீட்டை விட குறைவு | ஸ்ரீராஜ கணபதி இன்ஜினியரிங்ஸ் ஒர்க்ஸ் 1.50 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | அலுவலகத்தில் பழுதடைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை மாற்றி அமைக்கும் பணி | 30,000 | எம்.ரகு 0.10% மதிப்பீட்டை விட குறைவு | S.L.பாபு 0.50% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | உயர் கோபுர மின் விளக்குகளில் உள்ள சோடியம் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றி பொருத்தும் பணி | 2,00,000 | எம்.ரகு 0.25% மதிப்பீட்டை விட குறைவு | S.L.பாபு 0.70% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | பேருந்து நிலையத்தில் உள்ள கழிவறை, மோட்டூரில் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் உள்ள பாழடைந்த சமையல் கூடம் மற்றும் வார்டு எண்.21 திருக்குள மேடு பகுதி அருகில் அமைந்துள்ள வருவாய் ஆய்வாளர் அவர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த கட்டிடம் இடித்து அகற்றும் பணி | 1,10,000 | எம்.ரகு 0.30% மதிப்பீட்டை விட குறைவு | S.L.பாபு 1.00% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | இந்நகராட்சியில் புதியதாக 1 KW GENSET – 2 எண்ணிக்கையில் சப்ளை செய்யும் பணி | 1,00,000 | எம்.ரகு 0.25% மதிப்பீட்டை விட குறைவு | S.L.பாபு 0.75% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக்குறிப்பு :–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குடிநீர் பணிகள் மற்றும் வடக்கிழக்கு முன்னெச்சரிக்கை திட்டப் பணிகள் என்பதால் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1120/2022/எச்1)

29.12.2023

<u>பொருள்எண்.36</u>

சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி 2023–2024 கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 19.12.2023–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் பெயர் | தொகை ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிஎல்லைக்குட்பட்டவார்டு எண்.14, பாரதி நகர் கிழக்கு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 9,50,000 | S.L.பாபு 0.38% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.61% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14, முருகா ரெட்டி குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி. | 6,00,000 | S.L.பாபு 0.70% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 1.13% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | வார்டு எண்.26 அன்னதான சத்திரம் ரோடு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 8,50,000 | S.L.பாபு 0.63% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.59% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண்.26 பொன்னியம்மன் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 2,60,000 | S.L.பாபு 0.15% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.45% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | வார்டு எண்.01 சித்தூர் சாலை குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை பழுது பார்க்கும் பணி | 1,00,000 | S.L.பாபு 0.30% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.70% மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | வார்டு எண்.14 முருகா ரெட்டி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 4,85,000 | S.L.பாபு 0.41% மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.67% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக்குறிப்பு :–

நகர்மன்றத் தீர்மான எண்.573 ஒப்புதல் அளிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1) | |
| 29.12.2023 | **<u>பொருள்எண்.37</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண்.04, வெள்ளாத்தூரன் முதலி தெருவில் மழைநீர்வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு ரூ.9.80 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளமன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.574 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **<u>பொருள்எண்.38</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண்.07 புதிய ஒத்தவாடை தெருவில் பழுதடைந்துள்ள சிமெண்ட் சாலையை சீரமைக்கும் பணிக்கு ரூ.50,000/– மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.575 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **<u>பொருள்எண்.39</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண். 17, நாரைகுளம் மேடுபகுதியில் மழைநீர்வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு ரூ.9,80,000/– மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.576 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **<u>பொருள்எண்.40</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06 பழைய ஒத்தவாடை தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி | நகர்மன்றத் தீர்மான எண்.577 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 )</td><td></td></tr>
<tr><td>29.12.2023</td><td><u>பொருள்எண்.41</u><br>இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டுவரும் CANON Ir3025–ல் Cleaning Blade, Charge Roller, M35 Censor மற்றும் Front Door Censor பழுதடைந்துள்ளது. பழுதடைந்துள்ள பொருட்களை புதியதாக மாற்றிடவும் மற்றும் பழுதுநீக்கம் செய்ய வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவீனம் தொகை ரூ.12000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.<br>அலுவலகக்குறிப்பு:-<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.2023-24ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:-1739/2023/அ1.</td><td>நகர்மன்றத் தீர்மான எண்.578 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29.12.2023</td><td><u>பொருள்எண்.42</u><br>இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டுவரும் CANON Ir3025–y; Cleaning Blade, Charge Roller, M35 Censor மற்றும் Front Door Censor பழுதடைந்துள்ளது. பழுதடைந்துள்ள பொருட்களை புதியதாக மாற்றிடவும் மற்றும் பழுதுநீக்கம் செய்ய வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவீனம் தொகை ரூ.12000/-க்கு நகரமன்றம் முன்அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.<br><table><tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>தொகை</th></tr><tr><td>1.</td><td>R.Tamilarasan,<br>GEM SYSTEMS<br>No.585, PHASE –3, Oasis 2nd Street,<br>Sathuvachari, Vellore</td><td>11,500/-</td></tr><tr><td>2.</td><td>K.P.Mugilarasan,<br>Canon & Ricoh Xerox<br>No.22/35, Old Bye–Pass Road,<br>Vellore</td><td>11,900/-</td></tr></table></td><td>நகர்மன்றத் தீர்மான எண்.579 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:-**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்:1ல் உள்ள R.Saravanan, GEM SYSTEMS No.585, PHASE –3,Oasis 2nd Street, Sathuvachari, Vellore அவர்களின் குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:-1739/2023/அ1. | |
| 29.12.2023 | **<u>பொருள்எண்.43</u>**<br>இந்நகராட்சி அலுவலக உட்புற பணியாளர்கள், வெளிப்புற பணியாளர்கள் மற்றும் DBCபணியாளர்கள் ஆகியோருக்கு Rope மற்றும் அடையாள அட்டையுடன் (Rope With ID Card) பணியாளர்களுக்கு வழங்கிட வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவீனம் தொகை ரூ.18000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.2023-24ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:-1740/2023/அ1 | நகர்மன்றத் தீர்மான எண்.580 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **<u>பொருள்எண்.44</u>**<br>இந்நகராட்சி அலுவலக உட்புற பணியாளர்கள், வெளிப்புற பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்கள் ஆகியோருக்கு Rope மற்றும் அடையாள அட்டையுடன் (Rope With ID Card) பணியாளர்களுக்கு வழங்கிட வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவீனம் தொகை ரூ.18000/-க்கு நகரமன்றம் முன்அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது. | நகர்மன்றத் தீர்மான எண்.581 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| வ.எண் | பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | R.Saravanan,<br>Saran Photo Studio,<br>21,Arakonam Road,<br>Thiruthani. | 17,600/- |
| 2. | C.Ravichandran,<br>Kalaivani Photo Lab,<br>Bazzar Street,<br>Thiruthani | 17,900/- |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:-**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்:1ல் உள்ள R.Saravanan, Saran Photo Studio 21,Arakonam Road, Thiruthani அவர்களின் குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>3.பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்கள் முன்னனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:-1740/2023/அ1. | |
| 29.12.2023 | **பொருள்எண்.45**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 குட்டை தெரு மற்றும் வார்டு எண்.12 பஜார் தெருவில் பைப்லைன் அமைத்து 3 எண்ணிக்கையில் சின்டெக்ஸ் தொட்டி பொருத்தும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.582 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **பொருள்எண்.46**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், கொண்டபாளையம், பஜார் தெரு, அண்ணா சிலை மற்றும் பேரூந்து நிலையம் பகுதிகளில் 2021-2022 ஆம் நிதியாண்டில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சி.சி.டி.வி கேமராக்கள் பொருத்தப்பட்டது, அதனை ஓர் ஆண்டிற்கு ( ஜனவரி 2024 முதல் டிசம்பர் 2024 முடிய) பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.583 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **பொருள்எண்.47**<br>இந்நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் பிரிண்டர்களுக்கான புதிய டோனர்கள் மற்றும் ரீபில்கள் செய்ய ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.50,000 ஆயிரத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து | நகர்மன்றத் தீர்மான எண்.584 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | |
| 29.12.2023 | **பொருள்எண்.48**<br>சோளிங்கர் பேருந்து நிலையம் பேரூராட்சியாக இருந்த காலத்தில் கட்டப்பட்டது, தற்போது பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்ந்த நிலையில் பொதுமக்களின் போக்குவரத்து அதிகமான காரணத்தினால் பேருந்து நிலையத்தில் போதிய இடவசதி இல்லாமல் உள்ளது, எனவே பொது மக்களின் நலன் கருதியும் நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்தவும் இட நெரிசல்களை தவிர்க்கும் பொருட்டு பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்யும் பணியினை கலந்தாலோசகர் மூலம் (DPR) மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்ய வேண்டி கலந்தாலோசகரை நியமித்து பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகைக்கும் இச்செலவினத்தை தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.585 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | **பொருள்எண்.49**<br>இந்நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குளத்தை மேம்படுத்தும் பணிக்காக வண்ணான் குளத்திற்கு நீர் வருவதற்கு வழிவகை செய்ய ஏதுவாக 3 அடி விட்டம் கொண்ட 6 எண்ணிக்கையில் RCC பைப்லைன் பதித்து பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும் மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.586 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29.12.2023 | <u>பொருள்எண்.50</u><br>இந்நகராட்சியில் பணிபுரியும் பொது சுகாதார பிரிவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் பொறியியல் பிரிவு பணியாளர்களுக்கு சீருடை வழங்க அரசாணை (2டி) எண்.37 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.05.99 மற்றும் அரசாணை(நிலை) எண்.168, நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.16.11.2015 –ன் படி பொது சுகாதார மேற்பார்வையாளர்கள் –4, பொது சுகாதார பணியாளர்கள் –24, அலுவலக உதவியாளர்–2 மற்றும் பொறியியல் பிரிவு பணியாளர்கள் –6 ஆக மொத்தம் –36 பணியாளர்களுக்கு இரண்டு செட் சீருடைகள் வழங்க வேண்டியுள்ளது, அதன் படி சீருடைகள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்க ஆகும் தோராய செலவின தொகை ரூ.65,000 மற்றும் அதற்குண்டான தையற்கூலி ரூ.29,000 செலவின தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி ஒப்புதலை எதிர்நோக்கி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், சோளிங்கர் நிறுவனத்தில் வாங்குவதற்கான சப்ளை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண். 1814/2023/ எச்1) | நகர்மன்றத் தீர்மான எண்.587 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 29.12.2023 | <u>பொருள்எண்.51 சிறப்பு தீர்மானம்</u><br>முன்னாள் சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் திரு.விஜயகாந்த் அவர்கள் 28.12.2023 அன்று இயற்கை எய்தினார், அன்னாருக்கு சோளிங்கர் நகரமன்ற தலைவர், நகரமன்ற துணைத்தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் சார்பாக ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. | நகர்மன்றத் தீர்மான எண்.588 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

(ஒம்)தமிழ்செல்வி அசோகன்
நகர மன்ற தலைவர்
சோளிங்கர் நகராட்சி

/உண்மை நகல்/

12/3/24

ஆணையாளர்
சோளிங்கர் நகராட்சி

12/03/24